**செ. கு. எண்: 165** **நாள்: 21.08.2020**

# மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் **திரு. எடப்பாடி K.பழனிசாமி** அவர்களின் வாழ்த்துச் செய்தி – 21.8.2020

மாண்புமிகு அம்மாவின் அரசு, தமிழ்நாட்டைச் சேர்ந்த திறமை மிக்க விளையாட்டு வீரர்களை கண்டறிந்து, அவர்களுக்கு சர்வதேச தரத்தில் அமைக்கப்பட்டுள்ள விளையாட்டு அரங்கங்களில் பயிற்சி அளித்து,, உயரிய ஊக்கத் தொகை வழங்கி விளையாட்டு வீரர்களை ஊக்குவிக்க பல்வேறு திட்டங்களை செயல்படுத்தி வருகின்றது.

2016–ல் பாரா ஒலிம்பிக்ஸ் உயரம் தாண்டுதல் போட்டியில் தங்கப் பதக்கம், 2018-ல் ஆசிய பாரா விளையாட்டுப் போட்டிகளில் வெண்கல பதக்கம் மற்றும் 2019-ல் உலக பாரா சாம்பியன் ஷிப் போட்டிகளில் வெண்கல பதக்கம் வென்று இந்திய நாட்டிற்கும், தமிழ்நாட்டிற்கும் பெருமை சேர்த்த திரு. T. மாரியப்பன் அவர்களுக்கு மத்திய அரசு "பத்மஸ்ரீ விருது" மற்றும் "அர்ஜுனா விருது" ஆகியவற்றை வழங்கி கௌரவித்தது. தமிழ்நாடு அரசும் திரு. மாரியப்பன் அவர்களுக்கு 2 கோடி ரூபாய் உயரிய ஊக்கத் தொகை அளித்தது.

தற்போது, மத்திய அரசு திரு. மாரியப்பன் அவர்களுக்கு "ராஜீவ் காந்தி கேல் ரத்னா விருது" அறிவித்தது நம் அனைவருக்கும் மகிழ்ச்சியான செய்தி ஆகும். இத்தருணத்தில் திரு. மாரியப்பன் அவர்களுக்கு என் சார்பாகவும், தமிழ்நாட்டு மக்கள் சார்பாகவும் மனமார்ந்த நல்வாழ்த்துகளையும் பாராட்டுதல்களையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

"தெய்வத்தான் ஆகா தெனினும் முயற்சிதன்
மெய்வருத்தக் கூலி தரும்"

என்ற திருவள்ளுவரின் வாக்கிற்கேற்ப திரு. மாரியப்பன் அவர்களின் மன உறுதியும், விடா முயற்சியும் அவரது வெற்றிக்கு வித்திட்டது. எண்ணித் துணிந்தால், எதுவும் தடையல்ல என்பதற்கு சான்றாக திகழும் திரு. மாரியப்பன் அவர்கள், இடையூறுகளைத் தாண்டி, சாதனை படைக்க விரும்பும் அனைவருக்கும் ஒரு முன்னுதாரணமாக திகழ்கிறார்.

திரு. மாரியப்பன் அவர்கள் மேலும் பல சாதனைகள் புரிந்து தமிழ்நாட்டிற்கும் இந்திய திருநாட்டிற்கும் பெருமை சேர்த்திட வேண்டும் என மனமார வாழ்த்துகிறேன்.

**K.பழனிசாமி**
தமிழ்நாடு முதலமைச்சர்

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**